பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 21 சனிக்கிழமை (04 - 03 - 2000) VALAMPURI ஒலி: 76



-5 MAR 2000
-5 MAR 2000


★ ஒன்பது வருட கால இடைவெளிக்குப் பின்

# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று பக்தர்களின் முன் சிவனுக்கு பூசை!

## நூற்றுக்கணக்கானோர் கலந்து கொள்வர்

(கொழும்பு விசேட நிருபர்)

ஒன்பது வருட கால இடைவெளிக்குப் பின் சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்துக்களின் புனித வணக்கஸ்தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் உட்பகுதியில் இருந்து இராணுவம் வெளியேறியநிலையில் சிவராத்திரி தினமான இன்று பகல் பூசைகள் செய்வதற்கு படையின ரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பூசை செய்வது தொடர்பாக இராணுவத்தினர் மன்னார் அரச அதிபருக்கு தகவல் அனுப்பி வைத்துள்ளனர்.

சிவராத்திரி தினத்தன்று ஆலயத்தில் இருந்து இராணு வத்தை வெளியேற்ற வேண் டுமென்று ஈ.பி.டி.பி.அமைப் பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தவுடன் அந்த அமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகள் வேண்டு கோள் விடுத்திருந்தன.

இவர்களின் வேண்டு கோளை அடுத்து ஆலயத்தின் வசந்த மண்டபம், மற்றும் உள்வீதியிலிருந்து இராணு

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து

## படை முற்றாகவெளியேறவேண்டும்

## இந்து அமைப்புக்கள் தீர்மானம்

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் உட்பிரகாரத் திலும் ஆலயத்தை அண்டி யுள்ள புனிதபிரதேசத்திலும் நிலைகொண்டுள்ள இராணு வம் முற்றாக வெளியேற்றப் படவேண்டும்,

அரசாங்கம் ஏற்கனவே உறுதி அளித்திருந்தபடி ஆல யப் புனரமைப்புக்கு முப்பத் தைந்து மில்லியன் ரூபாவில் மிகுதியான இருபத்தைந்து மில்லியன் ரூபாவைஉடனடி யாக வழங்க வேண்டும்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் இன்றைய நிலை தொடர்பாக இந்து சமய அமைப்புக்கள் ஒன்று கூடி மேற்கண்ட தீர்மானங் களை எடுத்துள்ளன.

வெள்ளவத்தை பெண்கள் ஆய்வுநிறுவனத்தில் இந்து அமைப்புக்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கொழும்பு மாவட்ட எம்.பி. பி.பி. தேவராஜா மக்கள் நடவடி கைக் குழு இணைப்பாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆலயப் புனரமைப்பு வேலைகளுக்கு

## கீரிமலை நகுலேஸ்வரத்திற்கும், மாவைக்கந்தனுக்கும் தலா 20லட்சம்

### சிவதாசன்எம்.பி நேரில் வழங்குவார்

(கொழும்பு)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குப் புனரமைப்பு வேலைகளுக்காக 20 லட்சம் ரூபாவினையும், மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயில் புனரமைப்பு வேலைகளுக் காக 20 லட்சம் ரூபாவினை யும் ஆலய நிர்வாகிகளி டம் கையளிப்பதற்காக இன்று ஈ.பி.டி..பி எம்.பி எஸ். சிவதாசன் எடுத்து வந்துள்ளார்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற விருக் கும் சிவராத்திரி விழாவில் கலந்து கொள்வதற்காக வரு கைதரும் எம்.பி சிவதாசன் இந்நிதியினை நேரடியாக சம்பந்தப்பட்ட ஆலய உரி மையாளர்களிடம் கையளிக்க வுள்ளார். (வ)

## விமானப் பயணிகளை இறக்கும் இடம் மாற்றம்

(கொழும்பு)

கட்டுநாயக்காவி லிருந்து பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ் வண்டிகள் ப்யணிகளை றீகல் தியேட்டருக்கு அண் மையில் இறக்குவதற்குப் பதி லாக சென் .யோசப் கல்லூரி மருதானைக்கு முன் உள்ள தீயணைப்புப் படை நிலை யத்திற்கு அருகில் இறக்கப் படுவர் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (வ)

## பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

பல்வேறு சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரி ழந்தவர்களின் பெயர் விபரங் களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

வீரவேங்கைகளான

★ பிரதீபா (சச்சிதானந்தன் சசிகலா) கணேசபுரம்

★ பிரசாந்தினி

[6 ஆம்பக்கம் பார்க்க]

★திருமலை-காங்கேசன்துறை

## கப்பல்சேவை இன்னும் சில தினங்களில் கட்டணக் குறைப்பில் முடிவு இல்லை

(கொழும்பு)

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை இன் னும் சில தினங்களில் ஆரம் பிக்கப்படவுள்ளதாகத் திரு மலையில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயணிகள் கப்பல் சேவைக்கு சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து பச்சைக்கொடி காட் டப்பட்டபோதும் கப்பல் கட் டணத்தின் உயர்வினாலேயே கப்பல் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படு கின்றது.

திருமலைக்கும்-காங்கேசன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாலுசந்திக்கு அருகில் இரு மண்டை ஓடுகள்?

(அல்வாய்)

மாலுசந்திக்கும் அல்வாய் வீதிக்கும் இடையில் சுமார் 300மீ, தொலைவில் அமைந் துள்ள பழைய கராஜ் அரு கில் இருமனித மண்டை ஓடு கள் காணப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

கராஜ்ஜிற்கு அருகில் பனம் தோப்பு பகுதியில் இம் மண்டை ஓடுகள் காணப்படு கின்றதாகவும் அவற்றில் ஒன் றின் நெற்றிப்பகுதி சிறிய தாகவும மற்றைய மண்டை ஓடு பெரியதாகவும் காணப் படுகின்றது.

இப்பகுதி மக்கள் மிகுந்த பதற்றத்துடனும், அச்சத் துடனும் காணப்படுகின்றார் கள் மண்டை ஓடுகள் கிடக் கும் பகுதியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் இராணு வக் காப்பரண் அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது,

## நேர்முகப்பரீட்சைக்குச் செல்ல விரும்பும் அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

11ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள அதிபர் பதவிக்கான நேர் முகப் பரீட்சைக்கு கொழும்பு செல்வதற்குரிய விண்ணப்பங் களை வலயக் கல்விப் பணிப் பாளர்மூலம், சிவில் தலை மைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை தற்கொலைக் குண்டுதாரி நேற்று இனங்காணப்பட்டார்

[திருகோணமலை]

திருகோணமலை நகரில் நேற்று முன்தினம் 221ஆவது படைப்பிரிவின் தளபதிபியால் அபயசேகராவை இலக்கு வைத்து தாக்குதல் நடத்திய பெண் தற்கொலைக் குண் டுதாரி மூதூர்கட்டைப் பறிச்சானைச் சேர்ந்த சிவ ராஜா கலாவாணி (வயது27) என இனங்காணப்பட்டுள் ளார்.

தற்கொலைக்குண்டுத் தாக்கு தலை யடுத்து கைதுசெய்யப் பட்ட அருண் என்ற 10 ஆம் ஆண்டு மாணவன் கொடுத்த தகவல்களை அடுத்தே தற்

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

பலவர்ண முயல்; மொஸ் கோவித்தாரா, ஆபூர்வஇன சிலுக்கி கோழி, பசுமாடு கன்றுடன் விற்பனைக்கு உண்டு. பாலேந்திரக்குமார் ஜெயந்தன், நாகேந்திரமடம், அராலி வடக்கு. (206)

## கேணி துப்பரவு

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரியை முன்னிட்டு வில்லூன்றி புனித தீர்த்தம் நேற்று முன்தினம் இறைத்துத் துப்பரவு செய்யப்பட்டது. மழை காரணமாக தீர்த்தக் கேணி நிறைந்திருந்த போதும் பக்தர்கள் தீர்த்த மாட வசதியாக மேலதிக நீரிறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் கேணி இறைத்துத் துப்பரவு செய்யப்பட்டது. (க)

## தேசிய அடையாள அட்டைக்கு
# விண்ணப்பிப்போர் விண்ணப்பத்துடன் விளக்க கடிதத்தையும் இணைக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

ஆட்பதிவுத் திணைக்களத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்கள் 1970ஆம் ஆண்டோ அல்லது அதற்கு முன்போ பிறந்திருந்து, இற்றைவரை விண்ணப்பிக்காதுவிடின் எதிர்வரும் காலங்களில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதாயின் விண்ணப்பத்துடன்ஓர்விளக்கக் கடிதத்தையும் அனுப்பவேண்டும்.

இக்கடிதத்தில் இதுவரை காலமும் விண்ணப்பிக்க முடியாததற்கானகாரணத்தினை அக்கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

பொதுவாக சகல விண்ணப்பதாரிகளினாலும் அனுப்பப்படும் புகைப்படப்பிரதிகள் விரைவில் தமது கறுப்பு வெள்ளைத்தன்மையை இழப்பதனால் தரமான புகைப்பட பிரதிகளை இணைக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மிலேனியம் கண்காட்சி

எதிர் வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தொழிற்துறை திணைக்களத்தால் யாழ். மத்திய கல்லூரியில் ஏப்ரல் 9, 10, 11ம் திகதிகளில் மிலேனியம் கண்காட்சி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலாமன்ற சிறுவர். கலைக்கூடச் சிறார்களின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு, மன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். யுனிசெவ் நிறுவனத்தின் திட்ட அலுவலர் பஷீர் ரனி இப்போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## எல்லே சுற்றுப் போட்டி

(அரியாலை)

நல்லூர் பிரதேசசெயலகத்தினால் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை, எல்லேசுற்றுப் போட்டி காலை 8.30மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடாத்தும் தெல்லிப்பழை. பிரதேச மட்ட இளைஞர் சழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்றும் நாளையும், விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு எல்லே சுற்றுப் போட்டியும், ஆண்கள் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிக்கு துடுப்பாட்டமும் வலைப்பந்தாட்டமும் இடம் பெறவுள்ளது.

இவ்விளையாட்டுக்கள் யாவும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்தில் நடைபெறுகின்றது. [செ]

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்/ புனித சாள்ஸ் மாகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெறும்.

இதற்கு யாழ். கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ. இராஜகோபால் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அருட்திரு பா. பி. இராஜசிங்கம், வைத்திய அதிகாரி ஆ. திருநாவுக்கரசு. ஆகியோர் கலந்து கொள்வார். (க)

# சிவராத்திரி நிகழ்வுகள்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினர் நடாத்தும் மகா சிவராத்திரி விழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இரவு 8 மணி முதல் நிலையஅரங்கில் இடம் பெறவுள்ளன. சிறப்பு அம்சமாக இசை நிகழ்ச்சியும், நாடகங்களும் இடம்பெறவுள்ளது. (க)

★ ★ ★

கொக்குவில் தலையாழி ஸ்ரீஞான வைரவர் கோவில் சிவராத்திரி விழா இன்று விஷேட பூசை வழிபாடுகளுடன் நான்கு ஜாமமும் இடம் பெறவுள்ளது. (4)

★ ★ ★

சாவகச்சேரி வாரிவேணநாதர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை சிவராத்திரி தினத்தன்று. ஆறு காலப் பூசைகளும், விசேட வழிபாடுகளும், இடம்பெறவுள்ளன. (க-21)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி நிகழ்வுகள் இன்று இடம் பெறவுள்ளன.

மாலை 6 மணி முதல் நான்கு ஜாமப் பூஜை வழிபாடுகள் மற்றும் பஜனை நிகழ்வுகள், மாணவர்களின் பேச்சுவன்மை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்தான சிவராத்திரிவிழா இன்று 4 ஆம் திகதி இடம் பெறும்,

பகல் விநாயகப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெறும் மாலை 6.30 மணிமுதல் அதிகாலை 5 மணிவரையும் நான்கு ஜாமத்திற்கும் சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிடேகமும், ஆராதனைகளும் இடம்பெறும்.

அத்துடன் மகாசிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சிகளாகப் பண்ணிசைக்கச்சேரி, சொற்பொழிவு, பரதநாட்டியம், பட்டிமன்றம் முதலியனவும் நடைபெறும். (க)

★ ★ ★

அரியாலை மேற்குவெட்டுக் குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

நான்கு ஜாமப் பூசைகளுடன் இசை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

## (இராசி பலன்)

04.03.2000
சனிக்கிழமை
(தமிழுக்கு மாசி - 21)

திரயோதசி காலை 10.32 வரை, அவிட்டம் காலை காலை 6.48 வரை, சித்தாமிர்தயோகம் இராகுகாலம் காலை 9.57 முதல் 11.26 வரை, சுபநேரம் மாலை 3.54 முதல் 5.22 வரை, மகாசிவராத்திரி.

**மேடம்:** உற்சாகவர்வேற்பு, பணவரவு, சமயப்பணி.

**இடபம்:** வாழ்க்கைச்சிறப்பு. மனக்களிப்பு, வாக்குவன்மை.

**மிதுனம்:** பயனற்ற செலவு, முறுகல் நிலை, அலைச்சல்.

**கடகம்:** மனவேதனை, குழப்பமடைதல், கணவன் சினம்.

**சிங்கம்:** தாயார்அறிவுரை, தொழில் சிறப்பு, விருந்தோம்பல்.

**கன்னி:** இனிய உறவு, குடும்பசுகம், உறவினர் சங்கமம்.

**துலாம்:** தப்பு செய்தல், பயமிகுதி, எதிரிகள் துயர்.

**விருச்சிகம்:** தொழில் கஸ்டம், சபல புத்தி, பணக்கஸ்டம்.

**தனுசு:** தானம செய்தல், பெண் பாராட்டு, சகோதரபாசம்.

**மகரம்:** குடும்பவிரோதம், கடமை தவறல், வைத்தியச்செலவு.

**கும்பம்:** தற்பெருமை, விவேகமன முடிவு. ஆசாரம்.

**மீனம்:** கூடிப்பிரிதல், கண் துடைப்பு, ஆவேசப்பேச்சு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

திருமறைக் கலாமன்றம்
சிறுவர் கலைக்கூடம்
நடத்தும்

**இல்ல மெய்வல்லுநர் போட்டி 2000**

பிரதம விருந்தினர்: பஷீர் ரனி
(யாழ். யுனிசெவ் நிறுவன திட்ட அதிகாரி)

சிறப்பு விருந்தினர்கள்:
அருள் திரு அன்புறாஜ் அடிகள்
திரு. எஸ். மரியதாஸ்
(முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சின், அதிகாரி திருமலை)

காலம்: 04 - 03 - 2000 சனி
நேரம்: பிற்பகல் 3. 00 மணி
இடம்: மன்ற மைதானம்

திரு. J. யோண்சன்ராஜ்குமார்
பொதுச் செயலாளர்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (கி-106)

**கண்ணீர் அஞ்சலி**



**வைரமுத்து அன்ரன் சிவலிங்கம்**

யாழ்ப்பாணம் மாநகரசபை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினராகவிருந்து, 1 - 3 - 2000 அன்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட திரு. வைரமுத்து அன்ரன் சிவலிங்கம் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் எமது அனுதாபத்தையும், மரணமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைவர், உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
03 - 03 - 2000 (கி-107)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கணித ஆசான்
**திரு. பொன்னையா வேலாயுதம்**
*(VECTOR)*

அவர்களின் திடீர் மறைவு குறித்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கணித மாணவர்கள்
மகாஜனாக் கல்லூரி,
தெல்லிப்பழை.

00205

## சிவனவன் அருள் வேண்டும் ராத்திரி யல்லவோ

ராகம்: -கல்யாணி தாளம்: -ஆதி

**பல்லவி**

சிந்தனை செய்யாயோ என்தன் மனமே—சிவனை
வந்தனை செய்பாயோ நாளும் கணமே—இன்று
.. ......(சிந்........)

**அனுபல்லவி**

சிந்தனைக் கெட்டாத முன்னைப் பொருளை—அன்பர்
சிந்தையைத் தொட்டாடும் மூலப் பொருளை—என்றும்
........ (சிந் .........)

**சரணம்**

மாலயன் மனச்செருக்கைத் துடைத்த அண்ணலை—வளர்
மண்வெளி அகழ்ந்தலைய வைத்த மெய்பனை—அவர்
மனத்தொழும்இருள்போக்கிக்காத்தசெம்மலை—அன்பர்
மனதினில் அருள்கூட்டி வாழ்த்தும் அண்ணலை—இன்று
.........(சிந்..... ...)

சிவனருட் செயல்போற்றிப் பாடி மகிழுவாய்—ஐயன்
சிவன்பெயர் நிதம்சாற்றி உள்ளம் உருகுவாய்—மெய்யன்
சிவன்பதம் சிரத்தேற்றிப் பாடிப் பரவுவாய்—என்றும்
சிவசிவ எனப்போற்றி நெஞ்சம் நெகிழுவாய்—இன்று
.........(சிந்... .....)

சிவனுள்ளக் கனிவாலுன் துயர்கள் போக்குமே—குழும்
அரனுள்ளத் தயவாலுன் இடர்கள் ஓட்டுமே—பாடும்
அவனன்புக் கடலாலுன் பிணிகள் போக்குமே—கூடும்
சிவனுள்ளத் தருளாலுன் வினைகள் நீக்குமே—இன்று
.........(சிந்.........)

சிவன்பத நிழல்வேண்டும் நல்லிர வல்லவோ—ஆடும்
சிவனவன் துணைவேண்டும் ராத்திரியல்லவோ—நாடும்
சிவன்மலர்க் கழல்வேண்டும் நல்லிரவல்லவோ—தேடும்
சிவனவன் அருள்வேண்டும் ராத்திரியல்லவோ—இன்று
.........(சிந்.........)

''முருகு''

இன்று சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுவதனை முன்னிட்டு இப்பாடல்பிரசுரமாகின்றது.

யாழ்ப்பாணம்

★ ஆசிரிய நியமனம்

## தகுதியானவர்களுக்கு வழங்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சென்று புத்தளத்தில் வாழ்பவர்களில் கல்வித்தகைமை உடையவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்கா அவசர உத்தரவு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றோர் நீண்ட காலமாக எதுவித வேலைவாய்ப்புமின்றி வாழ்ந்து வருவதாக ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியதையடுத்தே மேற்கண்ட உத்தரவு ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது.

(க-து)

## இரு பெண்கள் பொலிஸாரால் கைது சாவகச்சேரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்கள் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

இராசம்மா கார்த்திகேசு (வயது-72) கார்த்திகேசு சசிகலா (வயது-34) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களது கைது குறித்து யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது.

(க-3)

## திருப்பலியும் மாதாந்த ஒன்று கூடலும்

(யாழ்ப்பாணம்)

கலைஞர்களுக்கான திருப்பலியும் மாதாந்த ஒன்று கூடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருமறைக் கலாமன்ற கலைத்தூதுமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத்திருப்பலியை அருள்திரு அன்புராஜ் அடிகள் நிறைவேற்றி வைப்பார்கள். (க-5)

## கிளைமோர் மீட்பு

(இளவாலை)

மாதகல் பகுதியில், படையினரால் பாவிக்கப்பட்டு கைவிடப்பட்ட பதுங்குகுழி ஒன்றில் இருந்து 2 கிளைமோர் கண்ணிவெடிகள் மீட்கப்பட்டன.

பதுங்குகுழியில் கிளைமோர் கண்ணிவெடி இருப்பதைக் கண்ணுற்ற பொது மக்கள் படையினரிடம் முறையிட்டதன் பேரில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (க-12)

## பருத்தித்துறை வைத்திய சாலையில் தொழில்நுட்ப உதவியாளர் நியமனம்

### -நோயாளர் அவலம் நீங்கியது

[புலோலி]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இரு ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர்கள் [எம்.எல்.ரீ] சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு நடாத்திய ஆய்வுகூடத்தொழில்நுட்பவியலாளர் ஆட்சேர்ப்பு பரீட்சைக்குத் தோற்றிய 65 தமிழர்களில் மூவர் மட்டுமே சித்தியடைந்திருந்தனர். இம்மூவரும் கொழும்பில் பயிற்சியை முடித்ததும் இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கும் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலைக்கும் சுகாதார அமைச்சால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நியமனத்தை அடுத்து பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் ஆய்வுகூடத்தொழில் நுட்பவியளலாளர் பற்றாக் குறையினால் நோயாளர்கள் அடைந்து வந்த பாதிப்புக்கள் ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

## வீதி துப்பரவு செய்யப்படுகிறது

(அரியாலை)

மாம்பழம் சந்திக்கும் கனகரத்தினம் சந்திக்கும் இடைப்பட்ட நாவலர் வீதியின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த பற்றைகள், புல்பூண்டுகள் வெட்டும் துப்பரவுப் பணியில் மாநகரசபை ஊழியர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், இவ்வளவு காலமும் அவ்வழியால் சென்று வந்த மக்கள் எதிர்நோக்கிய போக்குவரத்துப் பிரச்சினைகள் ஓரளவு தவிர்க்கப்பட்டுள்ளதாக மக்கள் திருப்தி தெரிவிக்கின்றனர். (க-84)

இந்தியவரவு-செலவுத் திட்டத்தில்

# பாதுகாப்பு செலவீனத்திற்கென 58 ஆயிரத்து 587 கோடி ஒதுக்கீடு

### -நிதி அமைச்சர் தகவல்

(புதுடில்லி)

இந்திய மத்திய அரசின் 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கென 98 ஆயிரத்து ஐந்நூற்றி எண்பத்தேழு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக இந்திய நிதி அமைச்சர் ஜஸ்வன்சின்கா தெரிவித்துள்ளார்.

மேற்படி வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்திய அரசாங்கத்தின் மொத்த செலவும் 3 இலட்சத்தி 38 ஆயிரம் கோடி ரூபாய் என்றும் பாதுகாப்புச் செலவீனம் கடந்த ஆண்டைவிட இம்முறை 13 ஆயிரம்கோடி அதிகமெனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி வரவு-செலவுத் திட்டத்தில் சேது சமுத்திரத் திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதனை தமிழ் நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி வரவேற்றுள்ளார்.

இந்தியா தன்னை அணுவாயுத நாடாக அறிவித்ததையடுத்து அணுவாயுத வல்லமையை வளர்த்து உறுதிப்படுத்திக் கொள்வதில் இன்னும் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிராஜ் - 2000 வகையான விமானங்களின் பயன் பாட்டின் உயர் செலவுகள் காரணமாகவும் விரிவான ஏவுகணைத் திட்டங்களுக்கான செலவுகள் காரணமாகவும் இந்திய – பாகிஸ்தான் எல்லையில் ஏற்படும் போர்ச் சூழ்நிலைகளாலும் இம்முறை இந்திய வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கான செலவு என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளது என்று லண்டனில் பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் கருத்துக் கூறினார். லண்டனிலுள்ள கிங்ஸ் சர்வகலாசாலையின் பாதுகாப்புக் கல்விப் பிரிவு இந்திய உபகண்ட நிபுணரான கலாநிதி கிறிஸ்ற் சிமித் என்பரே இக்கருத்தை வெளியிட்டார்.

(க-வ)

## மலை உச்சியில் பிள்ளை பெற்ற பெண் மொசாம்பிக்கில் மனதை உருக்கும் சம்பவம்

(இலண்டன்)

மொசாம்பிக் நாட்டில் அண்மையில்ஏற்பட்டவெள்ள அனர்த்தத்தில் சிக்குண்ட பெண் ஒருவர் மலை உச்சி ஒன்றில் பிள்ளை ஒன்றை பிரசவித்த மனத்தையுருக்கும் சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி மேலும் அறியப்படுவதாவது; மேற்படி பெண் வெள்ள அனர்த்தத்திலிருந்து தப்பிக்கும் முகமாக மலை உச்சியில் தங்கியிருந்த பொழுதே இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தாயும் பிள்ளையும் பாதுகாப்பாக மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் மேலும்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மொசாம்பிக் நாட்டிற்கு தேவையான அவசர உதவிகளை உடனடியாக வழங்குமாறு ஏனைய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களை ஐக்கிய நாடுகள்சபைசெயலர் கோபி அனான் கேட்டுள்ளார்.

(க)

## புதிய உலகைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் அல்ல! உரோம் வாசியே

### லண்டன் சஞ்சிகை தெரிவிப்பு

(இலண்டன்)

புதிய உலகைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் அல்ல. பெயர் தெரியாதஒரு ரோமன் வாசியே கண்டு பிடித்தார் என அமெரிக்க மெதடிஸ் பல்கலைக்கழக பூகோள அறிஞர் ஹரிஸ்டொப் உறுதிபடக் கூறியுள்ளதாக விஞ்ஞான சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் அதிகூடிய விற்பனையாகும் இதழ் என வர்ணிக்கப்படும் மேற்படி சஞ்சிகை இது குறித்து வெளியிடுகையில்; 1993 ஆம்ஆண்டு மெச்சிக்கோ பகுதியில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் படிதான் இம்முடிவிற்கு வந்துள்ளதாகவும் இது குறித்து அப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவ் அறிஞர் அழுத்தம்திருத்தமாக குறிப்பிட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்டுபிடிப்பானது சமூக, மற்றும் புவியியலாளர்கள் மத்தியில் ஒருவித பரபரப்பான ஓர் நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## உலக வலம்

### பொலிஸார் தாக்குதல்

[தைபே]

வடக்கிலுள்ள அரபு நகரமான தைபேயிலுள்ள கட்டடத்தொகுதிமீது இஸ்ரேலியப் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில்இருபலஸ்தீனர்கள்கொல்லப்பட்டனர்.

இக்கட்டடத்தொகுதியிலுள்ள வீடொன்றில் குண்டு உள்ளதாதாச் சந்தேகித்து பொலிஸார் சுற்றிவளைத்தனர். பொலிஸார் தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்தபோது பெரும்வெடிச் சத்தம் உள்ளே கேட்டதாம்.

[க-வ]

பல்கலை சம்பவத்தின் எதிரொலி

## ஈரானில் பொலிஸ்காரர் மீது விசாரணைகள் ஆரம்பமாகின

(தெஹ்ரான்)

ஈரானியத் தலைநகர் தெஹ்ரானிலுள்ளபல்கலைக்கழகமொன்றின் மீது கடந்த யூலை மாதம் வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டஇருபது பொலிஸ் அலுவலர்கள் மீது வழக்கு விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

இருபது வருடங்களுக்கு முன்னர் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்டதிலிருந்து இதுதான் மிகப்பெரும் வன்முறைச் சம்பவம் என விபரிக்கப்படுகிறது.

குற்றஞ் சாட்டப்பட்டவர்களுள் தெஹ்ரானின் பதில் பொலிஸ் தலைமை அதிகாரியும் அடங்குவார். பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழையும்படி இவரே பொலிஸாருக்கு உத்தரவு வழங்கினார்.

இவ்வன்முறைச் சம்பவத்தைத் தொடர்ந்து அவ்வதிகாரி ஈரானிய அரசாங்கத்தால் பதவி நீக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய பொலிஸ் அலுவலர்கள் மீது மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (க-வ)

## இம்மாதம் ரஷ்யத் தேர்தல்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இம்மாதம் 26 ஆம் திகதி இடம்பெற உள்ளதாக ரஷ்ய வானொலி நேற்று தெரிவித்தது.

தற்போது பதில் ஜனாதிபதியாக விளாடிமிர் புட்டின் கடமையாற்றி வருவதும் முன்னாள் ஜனாதிபதி பொறிஸ் ஜெல்ஸ்வினின் பதவி விலகலிற்குப் பின்னர் புட்டின் நியமிக்கப்பட்டதும் ஏற்கனவேதெரிந்ததே. (க-து)

## ரஷ்ய அமைச்சர்-ஐரோப்பிய தலைவர்கள் விரைவில் லிஸ்பனில் பேச்சுவார்த்தை

### அமெ. ராஜாங்க அமைச்சரும் பங்குபற்றுவார்

(லிஸ்பன்)

ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் இகேஸ் இவனோல் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் மற்றும் அமெரிக்க இராஜாங்கஅமைச்சர் மெடலின் ஒல்பிறைற் அம்மையாரையும் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார்.

ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் இகோர்இவனோல் போர்த்துக்கல் நாட்டில் ஐரோப்பிய யூனியன் தலைவர்களையும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் மெடலின் ஒல்பிறைற் அம்மையாரையும் சந்தித்து,

செச்சினியப் போரில் ரஷ்யப் படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளிப்படையான கலந்துரையாடல்களில் தாம் ஈடுபடவிருப்பதாகவும் ராஜதந்திர ரீதியில் பலமான வார்த்தைகளில் தமது கண்டனங்களை வெளியிட இருப்பதாகவும் ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய வெளிவிவகாரக் கொள்கைகள் மற்றும் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரி ஹவியஸ் சொலான மற்றும்வெளிவிவகார ஆணையாளர் றஸ்ற் பற்றன் உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைச்சர்கள் செச்சினியாவுக்குள் ஒரு நிரந்தரமான மனித உரிமைகள் அலுவலகத்தை அமைக்க ரஷ்யாவை வற்புறுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் முதல் சுற்றுப் பேச்சுக்கள் வியாழக்கிழமை காலை இடம் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-வ)

## பீஹாரில் முதல்வர் நியமனம்

(புதுடில்லி)

பீஹாரில் மாநில முதலமைச்சராக விதீஸ்குமார் மாநில ஆளுநர் வினோத் பாண்டேயால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பலத்த போட்டிகளுக்கிடையில் நிபந்தனையுடனான காங்கிரசின் துணையுடன் முதல்வர் பதவியை இவர் பொறுப்பேற்றுள்ளார்.

(க-து)

# தேவைக்கு குறைவான புத்தகங்களே வடமராட்சி பகுதிக்கு கிடைத்தன!

### கல்விப் பகுதி விசனம்

(புலோலி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு 1, 33, 277 இலவசபாடப் புத்தகங்கள் தேவைப்படுகின்ற போதும் கல்வியமைச்சு 80, 805 இலவச, பாடப்புத்தகங்களையே இதுவரை வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக கல்விப் பகுதியினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆண்டு2, ஆண்டு 7, ஆண்டு 10 ஆகிய வகுப்புகளுக்கே மிக குறைவான புத்தகங்கள் வந்திருக்கின்றன.

ஆண்டு 2க்கு தமிழ்ப்புத்தகம் முழுமையாக வரவில்லை. இவ் ஆண்டிற்குத் தேவையான 5758 புத்தகங்களில் 2175 புத்தகங்களே வந்துள்ளன.

ஆண்டு 7க்கு 18, 280 புத்தகங்களுக்கு பதிலாக 12, 971 புத்தகங்களும், ஆண்டு 10க்கு தேவையான 22, 003 புத்தகங்களில் 11, 145 புத்தகங்களே கல்வியமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. போதியளவு பாடப் புத்தகங்கள் வந்து சேராமையால் மாணவர்கள் பெரும் பாதிப்புகளுக்குட்பட்டு வருகின்றனர். (க-52)

## இலங்கையில் அமைக்கப்படும் புதிய 'ரெரஸ்ரார்' வீதி

(கொழும்பு)

மண்ணுடன் இரசாயனப் பொருட்களைக் கலந்து வீதி அமைக்கும் ரெரஸ்ரார் என்னும் அமெரிக்க தொழிநுட்ப நவீன முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்க இலங்கை நிறுவனங்கள் கூட்டாக இணைந்து மேற்கொண்டு வரும் இம் முயற்சி அத்தனகல எனும் இடத்தில் முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய வீதி அமைப்பில் கல், தார் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்படுவதில்லை

அத்தோடு மிகவும் குறைந்த செலவுடன் குறுகிய நேரத்தில் வீதிகளை அமைத்துக் கொள்ள முடியும்.

இதேசமயம்,

உலக நாடுகளில் இற்றை வரை 90 நாடுகள், இந்த அமெரிக்க தொழினுட்ப நவீன முறையை வீதி அமைப்பில் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (க-3)

## தடைஉத்தரவு நீக்கப்பட்டது

(பருத்தித்துறை)

கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் உதைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை இந்த வருடத்திலிருந்து நீக்கப் படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

1998 ஆம் ஆண்டு பருத்தித்துறை உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

(செ-11

### வலி. தென்மேற்குப் பகுதியில்

## உரிமம் பெறாத உணவுச்சாலை உரிமையாளர் மீது சட்டநடவடிக்கை

### சுகாதார அதிகாரி அறிவுறுத்து

[மானிப்பாய்]

இவ்வாண்டுக்கான உரிமம் பெறாமல், வலி. தென்மேற்குப் பகுதி பிரதேச சபையின் கீழ் இயங்கும் தேநீர்ச்சாலைகள், குளிர்பான நிலையங்கள், பேக்கரிகள் என்பன மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மானிப்பாய் சுகாதார வைத்திய பொறுப்பதிகாரி எஸ். இராசேந்திரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி நிலையங்களின் உரிமையாளர்களுடான சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்றபோதே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

உரியவர்களின் அனுமதியின்றி அவசரமாக ஆரம்பிக்கப்படும் உணவுக்கடைகள் இவற்றில் சுகாதாரம் பேணப்படாமை மற்றும் உணவுப் பொருட்களில் கலப்படம் போன்ற சமூகத்துக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டிருப்போர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அக்கலந்துரையாடலில் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது, [க]

## மகளிர் ஆலோசனை மன்றம்

(கொழும்பு)

மகளிர் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு தீர்வுகாணும் வகையில் நாடளாவிய ரீதியில் ''மகளிர் ஆலோசனை மன்றங்கள்' அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக அண்மையில் வடமேல் மாகாணத்துக்கான மகளிர் ஆலோசனை மன்றம் அமைக்கப்பட்டுள்ளது வெகுவிரைவில் ஏனைய மாகாணங்களுக்கும் மேற்படிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

(க-9)

### அம்பன் வைத்தியசாலையில்

## அம்புலன்ஸ் வசதி இல்லாமல் நோயாளர் பெரும் சிரமம்

(தென்மராட்சி)

அம்பன் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வசதிஇல்லாத காரணத்தினால் அங்கு அவசர மற்றும் அத்தியாவசிய சிகிச்சைகள் வழங்கவேண்டிய நோயாளர்களை பருத்தித்துறை, யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்கு அனுப்ப முடியாதநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பன் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்வசதி செய்துதரும்படி பலவேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதிலும் எவ்வித பலனும் இதுவரை கிடைக்கவில்லை என அப்பகுதியிலுள்ள மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் அம்பன் பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் வாராந்த வைத்திய சேவையைவழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதி மக்களிற்கு போதிய மருத்துவசேவை கிடைப்பதில்லை எனவும், மேலதிக மருத்துவசேவைகள் வழங்கப்படல் வேண்டும் எனவும் அம்பன்பகுதி பொது அமைப்புக்கள் விடுத்திருந்த கோரிக்கையை அடுத்து யாழ். செஞ்சிலுவைச்சங்கம் இத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது (க-77)

### மட்டக்களப்பில்

## தொண்டர் ஆசிரியர்களுக்கு விசேட அடையாள அட்டை

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில்கடமையாற்றும்தொண்டர் ஆசிரியர்களிற்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் மூலம் இவ் உத்தரவை விடுத்தஅவர் இது தொடர்பான நடவடிக்கைகளை உடன் மேற் கொள்ளுமாறு அவசர பணிப்பை விடுத்துள்ளார். (க)

### விதவைகள், விதுரர்கொடுப்பனவுகள்

## கடந்த முதலாம் திகதியிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு மாற்றம்

### பிரதம எழுதுவினைஞர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விதவைகள் ஒய்வூதியம் விதுரர் ஒய்வூதியம், குடிசார் ஒய்வூதியம் ஆகியவற்றுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகள் யாவும் கடந்த 1ம் திகதி முதல் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டதாக யாழ்.செயலக கணிப்பீட்டுக்கிளையின் பிரதம எழுதுவினைஞர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

முன்பு இப்பணி கொழும்பு பிரதம அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் மாவட்ட செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டு தற்போது பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு கடந்த மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விரிவுரைகளை ஒய்வூதிய கணிப்புக்கிளை பிரதம எழுதுவினைஞர் ச. சின்னத்துரை நிகழ்த்தினார்.

பயிற்சி முடிவில் கலந்து கொண்டோருக்கு கணிப்பு நடைமுறைக்கையேடுகள் வழங்கப்பட்டன.

ஏனைய ஒவ்வூதியம் சம்பந்தமான ஏனைய பணிகள் வழமை போல் யாழ். செயலகத்தினால் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளனர் (க-3)

## திட்டமிட்டபடி உண்ணாவிரதத்தை தன்னுடைய வீட்டில் அனுஷ்டிப்பார்

(கொழும்பு)

திட்டமிட்டபடி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயற் குழு உறுப்பினர் இ.நடராசாவின் (தில்லைக்கூத்தன்) உண்ணாவிரதம் கொழும்பு இந்து மாமன்ற முன்றலில் நடைபெறமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துமாமன்ற முன்றலில் உண்ணாவிரத மிருப்பதற்கு அனுமதி கிடைக்காததால் இ.நடராசா தனது வீட்டில் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

திருக்கேதீஸ்வர சுற்றாடலில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரி 3 ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக அண்மையில் அறிவித்திருந்தது தெரிந்ததே. (வ)

### நிவாரணம்; ஊழியர் சம்பள உயர்வு

## வழங்காமல் எம்.பிக்களுக்கு சம்பள உயர்வு ஏன்? ஐ.தே.க.பா. குழு கேள்வி?

[கொழும்பு]

ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பாராளுமன்ற சம்பள உயர் (10000ரூபாவாக அதிகரிப்பு) வை வைத்து நிதியம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகரித்தசம்பள உயர்வின் மேலதிக நிதியத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் செலுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை இந்நிதியத்திற்கு தனது முழுச்சம்பளத்தையும் இடுவதெனதெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாக கூட்டத்தில் ஆராயப்பட்ட போது மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்களை வழங்காமலும் அரச ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள அதிகரிப்புகளை வழங்காமலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தியமை கண்டனத்திற்குரியதாகும்.

1997ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி யோசனைகளை பாராளுமன்றத்தில் முழுமையாக சமர்ப்பிப்பதெனவும் இக்குழுக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது (வ)

## வழிகாட்டிகள்உதாரணபுருஷராக விளங்க வேண்டியது அவசியம்

### வலிகாமம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வழிகாட்டிகள் வெறும் உபதேசிகளாக மட்டும் இருக்காது உதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

மேற்கண்டவாறு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால்பேடன் பவல்நாளையொட்டி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடாத்தப்பட்ட விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ெற. இருதயநாதன் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், வெறும் பரீட்சைகளை மையமாகக் கொண்ட கல்வியின் இயந்திரத்தனமான மாணவப் போக்குகளை தகர்த்தெறிந்து, நவீன கல்விச் சீர்திருத்தத்தின் தீர்க்க தரிசியாக செயற்பட்டவர் தான் சாரணியத் தந்தை பேடன் பவல் என்றார்.

மேற்படி விழாவில் தலைமை வகித்துப் பேசிய மாவட்ட ஆணையாளர் திரு. ந. சௌந்தரராஜன், தனது உரையில்: உலகளாவிய ரீதியில் சாதி, சமய, இனபேதமற்ற ஒரே அமைப்பு சாரணியம் என்றும், இவ்வமைப்பு சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன்பட்டு ஆலவிருட்சம்போல் படர்ந்து விரிந்து காணப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

முதன்மைவிருந்தினர் எ.ஜி. செபநாயகம்தெரிவிக்கையில்; சமாதானம் என்பது ஒவ்வொரு மனித இதயத்திலிருந்தும் தோன்ற வேண்டும். அப்போதுதான் உலகில் சமாதானம் வரும், சாரணியம் சமாதானத்தையே அடிப்படையாகக் கொண்டது என்றார்.

கல்லூரி அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் உரையாற்றுகையில் இவ்விழாவின் நோக்கத்தை மாணவர்கள் விளங்கி. பெரியோர்களைக் கனம் பண்ணுதல், கட்டுப்படுதல் போன்ற சிறந்த ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடித்து நற்பிரஜைகளாக வளரவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பேடன் பவல் தினத்தையொட்டி மாவட்ட மட்டத்தில் நடாத்தி பரிசுபெற்ற பேச்சு, கவிதை, கிராமிய நடனங்கள் போன்ற நிகழ்வுகளும் இவ்விழாவில் இடம் பெற்றது. (க)

பல்லார் பகை கொளல்
பத்தடித்த தீமைத்தே
நல்லார் தொடர் கைவிடல்

- குறள்

# வலம்புரி

## காலம் பதில் சொல்லும்

அராஜகம் என்றும் நிலைப்பதில்லை; நிம்மதியைத் தருவதில்லை. இது வரலாற்று உண்மை வேகமாக முன்னேறிச் செல்லும் மனிதகுலத்தோடு சமதையாகநாமும் முன்னேற வேண்டும். சாக்கடைக்குள் தள்ளப்பட்ட ஜெந்துக்கள்போல வாழ்வு வறிதே கழியக் கூடாது. தடைக்கல்லாக இருந்தது பகைப்புலம் ஒன்றே.

புரிந்துணர் வின்மை மதன்னைப்போல் பிறரை நேசிக்காமை என்பன எம்மைப் பல வருடங்கள் பின்தள்ளிவிட்டன. தென்னிலங்கையில் தர்மத் தீமூண்டது அன்று. அது அனுமனால் ஆனது. வடஇலங்கையிலும் தீ மூண்டது. வன்மத்தால் மூட்டப்பட்டது. 'இதயத்தைப் பிடுங்கியதுபோல கண் போன்ற கல்விக்கு மூட்டிய தீயது. தென்கிழக்காசியாவில் சிறந்த யாழ். நூலகத்தில் பற்றிய தீயையே சுட்ட விரும்புகிறோம்.

சென்ற கால நிகழ்வுதான் மாறாத்தழும்பை ஏற்படுத்திய மறச்செயல் என்பதை என்றும் மறக்கலாகாது. அறம் கனிய காலம் செல்லும் தான் சிந்தனை தெளியும் போது - தன்னலம் அறுகின்றபோது - தியாகம் தலை காட்டுகின்றபோது மலர்வதே உண்மை மகிழ்வு; சுதந்திர நிலை.

சுந்தரப் பூமியில்சுதந்திரம் மலர்ந்தால் இந்திரலோகமாய் எழில் பெறுவது கூறித் தெரிவதில்லை கட்சிகள் பல பிச்சுப்பிடுங்கலை விட்டு நாடு பிழைக்கும் வழிக்குத் திரும்பியிருக்கின்றன.

நல்ல சகுனம்தான் நிம்மதிப் பெருமூச்சு ஓட்டப்பந்தயத்தின் ஆரம்ப நிலையில் தயாராகிவிட்டது. இனி ஓடிமுடித்து வெற்றிப்பீடத்தில் ஏற வேண்டியது தான்- ஒன்றுபட்டால் உண்டுதானே வாழ்வு.

கற்றுக் குட்டிகள்போல அரசியல் ஞானம் கொண்டிருந்த காலம் கடந்ததாக இருக்கட்டும் அற்றது பகை உற்றது உறவு என்று எக்காளிப்போம்- இன்னல் வடுக்கள் இல்லா தொழிக மின்னால் கீற்றென மேவிடும் சமாதானம் வந்து நிறைக.

- அன்புடன் ஆசிரியர்

# சிவசிந்தையுடன் தொண்டு வழிநின்று

# சைவம் காக்கும் 'சிவராத்திரியாகட்டும்'

வருடா வருடம் சிவராத்திரி வருகிறது. விரதம் மேற்கொள்கிறோம். புனித நீர் ஆடி நிம்மதி அடைகிறோம். ஏதோ ஒரு பிரமாதமான சாதனை செய்துவிட்டோம் என்ற திருப்தி அடைகிறோம். இருக்க வேண்டியதே.

சிவன் இராத்திரி பற்றிய புராணக் கதைகளும், உப கதைகளும் கேட்டும், எழுதியும் ஓர் அளவு சலித்து விட்டோம் என்றே நினைக்கத் தோன்றுகிறது.


உணவின்றி, நித்திரை நீக்கி இறை சிந்தனையோடு நிறைவடைய வேண்டிய நாள் இது. எத்தனை பேர் இந்த நிலையில் நின்று நோற்கிறார்கள் என்ற வினா தேவையற்ற தொன்றே. ஆனால் ஒன்று மட்டும் கூறப்பட வேண்டும்.

''குளிக்கப்போய் சேறு பூச வேண்டாம்'' ''நல்லது செய்தல் ஆற்றில் ஆயினும் அல்லது செய்தல் ஒப்புமின்''

இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இனம் ஏற்றுக் கொண்ட செந்நெறி.

சிவன்ராத்திரி நோன்பை காலம் காலமாகக் கைக்கொண்ட வழியிலிருந்து சற்று விலகி, ஆனால் சிவப் பொழுதாகவே செலவு செய்யக் கூடாதா?

இப்படிச் சிந்திப்பதும் ''நாத்திகம்'' என்று நாத்தரும் பேதம் பேச முயல வேண்டாம். சித்தத்தை சிவன் பால் இருத்தி, எத்திக்கும் எழில் பெற வாழ வழி காட்டாயா? இறைவா என்று கேட்பதே தவம்.



'என்னை மட்டும் ஏற்றுக் கொள்' என்று கேட்கும் தன்னலத்தை ஏழாம் நூற்றாண்டே சாடி விட்டார் சம்பந்தர்.

நாம் எல்லாம் திருக் கோயில்களில் வழிபாடு செய்து கொண்டிருக்க இறைவன் வேறு எங்கோ அலந்தோர் பட்டியிலும், தொட்டியிலும் உலா வரலாம் எனவே 'சிவன்இராத்திரி'யை தொண்டு இராத்திரியாக மாத்தினால் தவறாகுமா?

எங்கள் தெய்வம் ''தொண்டர்களுக்குத் தூதுபோய் நடந்த செந்தாமரை அடி'' யினன்தானே இறைவன் திருநிலைகள் எல்லாம் மக்கள் நலன் காக்கும் மையங்களாக ஒரு காலத்தில் இருந்தன என்பது எமது சைவ வரலாறு.

மழை, வெள்ளம், போர் போன்ற அனர்த்தங்களிலிருந்தும், வறுமை, பசிப்பிணி போன்ற இன்னல்களிலிருந்தும் மக்களைக் காக்கும் நிலையங்களாகவே கோயில்கள் அமைந்திருந்தன.

தோன்றிய அதே வழிப்பட்ட வாழ்வு நெறிதான் சைவம் என்பதை நாம் மறக்கக் கூடாது.

இவற்றை மனங் கொண்டு ஈடுபாடற்ற சடங்குகளில் அர்த்தமுள்ள செய்ற்பாட்டுக்கு நாம் மாற வேண்டும். புதர்மண்டிக் கிடக்கும் கோயில் சுற்றாடல்களை துப்பரவு செய்வோம்.

வீதிகளை உழவாரத்திருப் பணிக்காக்குவோம் மலர் வனங்களை உருவாக்குவோம்.

புதியனவற்றை ஆக்குவோம். திருவிளக்கிடுவோம். அப்பர் பெருமான் சொல்லிய, காட்டிய வழியைக் கைக்கொள்வோம்.

அனைத்திரவும் அவர் இரவாகும். முதியோர் கோயில்

**க. சிவராமலிங்கம் பீ. ஏ.**
முன்னாள் பிரதி அதிபர் யாழ். இந்துக்கல்லூரி

திரும்பவும் இந்த நிலைக்கு நாமும் நம் கோயில்களும் மாறித்தான் ஆக வேண்டும்.

தொண்டுடன் கூடிய சைவ வாழ்வு மலர வேண்டும். அன்பின் அத்திவாரத்தில் களில் ஆராதனை செய்யப்பட்டும் இளைஞர்கள்தொண்டர் படைகளாகத் திரண்டு சைவம் காப்போம். இதுவே இன்று வேண்டும் ''சிவன் இராத்திரி''

# கல்வியும் செல்வமும் இறை அருளை தரமாட்டா

# அன்போடு வழிபடுவோருக்கே அது கைகூடும்!

தமக்கோர் அன்னையும் அத்தனுமின்றித் தாமே உலகமனைத்தினுக்குத் தாயுந் தந்தையுமாயிருப்பவர் சிவபிரான். பிறப்பிலியாகிய அவரிடத்திலே அன்புபூண்டு, அவர் திருநாமமாகிய திருவைந்தெழுத்து மந்திரத்தை விதிப்படி செபித்தலும், அவர் விரும்பியுறையுந் தானங்களாகிய திருக்கோயில்களை வலம் வந்து தொழுதலும், அவரது திருப்புகழை வாயாரப் புகழ்ந்து பாடுதலும், பூவும் நீருங் கொண்டு அவரைப் பூசித்தாலும், உடல்நோயும், உயிர்நோயுங் கெட்டொழிய வேண்டிச் சிவசக்தி ரூபமாகிய திருநீற்றைத் தரித்தலும் ஆகிய செயல்களாலேதான் நம் பிறவிமாசும் ஒழியும்.

அன்றியும் சிவசம்பந்தமான இச்செயல்களைக் கைவிட்டு, செத்துச், செத்துப் பிறக்குந் தேவர்களைப் பூசித்தலும், வழிபடுதலும் ஆன்மலாபத்துக்கு உதவமாட்டா. அவ்வாறு முயல்வோர் செயல் ஆகாயத்தைத் தோல்போற் சுருட்டிவைக்க எண்ணுவோர் நிலை போன்றதேயாகும். இதனை; ''யதா சர்மவதாகாஸம் வேஷ்டியிஸ்யந்தி மானவாஹா! ததா ஸிவம விக்ஞாயது அகஸ்யாந்தோ பவிஸ்யதி!!'' என - விளக்குகிறது சுவேதாஸ்வர உபநிடதம்.

### சிவராத்திரி மகத்துவம்

சிவபிரானைப் பூசித்தலும், வழிபடுதலும் என்றைக்குஞ் செய்தாக வேண்டியனவே! ஆயினும்; சிவராத்திரி தினம் இதற்கு விஷேடமானது. காரணம் என்னவெனில்; கற்பாந்த காலத்திலே உலகுயிர்களெல்லாவற்றையுந் தனக்குளடக்கிக்கொண்டிருந்தார் சிவபிரான். அப்போது உமையம்மையார் நான்கு யுககாலமாகிய இருட்காலம் முழுவதிலும் சிவமூர்த்தியைப் பூசித்து வழிபட்டுக்கொண்டே இருந்தார். எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்; தாம் விரும்பும் உண்மையாவது பூசனை. எனவுரைத்தருள அண்ணலார் அர்ச்சனை புரிந்து வழிபட்டாள் உமையவள். இதனையுன்னிலே நாமும் சிவராத்திரி நாளிலே இரவுமுழுவதும் உறக்கந்தவிர்த்திருந்து நான்கு ஜாமங்களிலும் பூசை முதலியன செய்து வருகின்றோம்.

### அடிமுடிதேடிய கதை

சிவராத்திரி சம்பந்தமான புராணக்கதைகளுள் கலைமகள் நாயகராகிய பிரம்மாவும், திருமகள் நாயகராகிய திருமாலும் அடிமுடிதேடி அறிய வொண்ணாமல் நின்ற சிவப்பிரபாவக் கதையுமொன்று - இக்கதை மூலம்



''கல்வியாலும், செல்வத்தாலும் தருக்கிநிற்குமட்டும் சிவனருள் கைகூடாது. அன்போடுருகி அகங்குழைந்து வழிபடுவோர்க்கே அது கைகூடும்'' என்பது தெளிவாகின்றது.

சிவராத்திரி நாளின் இராக்காலம் முழுவதுமே பெருந்தவப் பொழுதாகும் இந்தவப் பொழுதைத் திரைப்பட, நாடக, கூத்துக்கேளிக்கைகளிற் செலவழிப்பது மாபாதகமாகும் இவ்விராப்பொழுதிலே சிவப்பூசை, சிவநாம ஜபம், திருமுறையர்ச்சனைகள், சிவபுராண படனங்கள், சிவாலய வழிபாடு முதலிய சிவ புண்ணியச் செயல்களைச் செய்தல் மிக மேலானதாகும். சிவாச்சாரியப் பெருமக்கள் ஸ்ரீ ருத்திரத்தை மெய்யன்புடன் ஓதலும், ஏனைய பக்த ஜனங்கள் திருமுறைகளை ஓதலும் இந்நாளில் மருத்துவம் வாய்ந்தது.

மண்ணும் புனலுயிரும் வருகாற்றும், சுடர் மூன்றும், விண்ணும் ஆகிய எல்லாவற்றினிடமாகவுமுள்ள சிவப்பிரபாவத்தைப் புகழ்ந்துபாடும் ஸ்ரீ ருத்திரத்தைத் தமிழிலே கூறும் திருநாவுக்கரசு சுவாமிகளின் 'இருநிலனாய்த்

**சைவப்புலவர் ஏ. அநுசாந்தன்**
(குப்பிழான்)

முக்கியமாகச் செய்யப்பட வேண்டியவைகள். திருமுறைகளுள் நாவுக்கரசு சுவாமிகள் அருளிய போற்றித்திருத்தாண்டகங்கள் ஐந்தையும், மணிவாசக சுவாமிகள் அருளிய போற்றித்திருவகவலையும் ஓதியபடி சிவலிங்க மூர்த்தியைப் பஞ்சவில்வங்களாலும், நறுமணப் பூக்களாலும் அர்ச்சித்தல் உத்தமமானது.

இலிங்கோற்பவ காலத்திலே (நள்ளிரவு 11.30 - 12.15 வரை) நாவுக்கரசர் அருளிய இலிங்க புராணத் திருக்குறுந் தொகைப் பதிகத்தை ஓதி வழிபடுதல் தீயாகி நீருமாகி'' எனத் தொடங்கும் நின்ற திருத்தாண்டகத்தையும் கட்டாயம் ஓதவேண்டும். வேலும்; ''படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற் திடமாவுறையுங்'' கேதீச நாதஸ்வாமியை நமது மனக் கோயிலுள்ளிருத்தி, (அவர் மீது சம்பந்த சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிச்செய்துள்ள) பதிகங்களாகிய முந்து தமிழ்மாலைகளை அவருக்குச் சாத்தி வழிபடுதலால் ஈழத்துச் சைவ மக்களாகிய நமக்கு உய்தி கூடும்.

## சிவனை சிந்தைகொள்ள சிறந்தராத்திரி

உமையாரும். பாகமாய் நின்றவன்
உலக இல்லறம் சொன்னவன்
சுமையொடு திணறி அழுபவர்
சுமைகளை இறக்கி வைப்பவன்
எமையொடு பொருளாய் எண்ணியே
எமக்குப் பொருளைத் தந்தவன்
இமைபோல் எம்மைக் காக்கவே
இடர்களை அகற்றித் தருபவன்

கலைகளை அள்ளித் தந்தவன்
கலைவடிவாகியே நிற்பவன்
நிலையில்லாத உலகினிலே
நிலை பேற்றையே தருபவன்
தலை வணங்கி நிற்போரை
தன்பணிக்கே அழைப்பவன்
சிலை வடிவோனைச் சிந்தைகொள்ளவே
சிறந்த சிவ இராத்திரியே

குப்பிளான் ஆ. மோகன்

# திருமலையில் கிரனேட் வீச்சு இரு பொலிஸார் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டை வீதியில் நகரில் இருந்து 3 மைல் தொலைவில் உள்ள மூன்றாம் கட்டைப் பகுதி பொலிஸ் காவல் நிலையக் காவலரண் நேற்று விடுதலைப்புலிகளின் கிரனேட் வீச்சுத் தாக்குதலிற்கு உள்ளாகியதில் இரு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலில் காயமடைந்த குமாரதாஸ[வயது 29] தர்மதாஸ (வயது 27) ஆகிய இரு கான்ஸ்டபிள்களும் திருகோணமலை தளவைத்தியசாலை விபத்துச் சேவைகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து ஒரு மணி நேரம் அப் பகுதி போக்கு வரத்திற்கு தடைப்பட்டதுடன் பதற்றமும் நிலவியது. (வ-103)

## பாதணிகளுக்குள்

# வெடி மருந்து கொண்டு செல்ல அனுமதித்த ஆறு பொலிசார் இடைநிறுத்தம்

பாதணிகளுக்குள் வெடி மருந்து கொண்டுசென்ற குழுவினரை எதுவித சோதனை நடவடிக்கைகளும் இன்றி அனுமதித்த ஆறு பொலிசார் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்

அம்பாறை மகா ஓயாவில் 69ஆம் மைல் கல் பொலிஸ் காவலரணில்கடமையாற்றிய பொலிசாரே இடைநிறுத்தம் செய்யப்பட்டவராவர்.

தென்பகுதியில் இடம் பெற்ற பல குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு பயன்படுத்தப் பட்டவெடிமருந்து குறிப்பிட்ட காவலரண் மூலமே கொண்டு செல்லப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. [க]

# நகரமண்டபகுண்டுவெடிப்பு தொடர்பாக பலர் கைது!

(கொழும்பு)

கொழும்பு நகரசபை மண்டப வளவில் நடந்த குண்டு வெடிப்புத் தொடர்பாக பல சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் குண்டை கொழும்புக்கு கொண்டுவந்த வாகனச் சாரதியும் அடங்குவர் வாகனமும் தற்சமயம் பொலிஸாரிடம் இருக்கிறது.

இது தொடர்பாக இரு விசேட பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும்இவ்விடயத்தை ஆராய இலங்கை வந்த அமெரிக்க நிபுணர் குழு இதுவரை தனது இறுதிவிசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை எனவும் குற்றப்புலனாய்வுப்பிரிவு பணிப்பாளர் தெரிவித்துள்ளார் (வ-4)

## கப்பல் சேவை---

துறைக்குமான கப்பல் கட்டணம் கூடவாக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்ததுடன் கட்டணத்தைக் குறைக்குமாறு கப்பல் உரிமையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது, (வ)

## பல்வேறு---

(வீரசிங்கம் பாமினி) யாழ்ப்பாணம்

★ சந்திரன்
(செல்வராஜா பத்மநாதன்) மட்டக்களப்பு

எல்லைப்படை வீரர்களான

★ ராஜா
(ஸ்ரீரங்கன் ராஜா) ஓமந்தை

★ அனவன்
(நடராஜன் அனவன்) கிளிநொச்சி

லெப்டினன்ட்களான

★ அறிவுமணி
(கிருஸ்ணமூர்த்தி கிருஸ்ணகாந்) திருமலை

★ ரஞ்சிதன்
(கதிர்காமநாதன் திருமகன்) யாழ்ப்பாணம்

**ஸ்ரீ செல்வா**

யாழ். ஸ்ரான்லி வீதி,

காலை 10-30 பி.ப 2.30

**அருண் பாண்டியன் நடித்த**

**காக்கிச் சட்டையா கறுப்புச் சட்டையா**

(புதிய வெளியீடு)

CD பிரதி

(00115)

## உதய தாரகையில் சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோணாந்தோட்டம் உதய தாரகை ச. ச. நிலையத்தின் சிவராத்திரி நிகழ்வுகள் இன்று இரவு 9 மணிக்கு நிலையத் தலைவரும் கிராம உத்தியோகத்தருமான நா. சுந்தரராஜன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகவும் வண்ணை சிவன் தேவஸ்தான அறங்காவலர் க.வைத்திலிங்கச் செட்டியார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

மங்கள இசை, சமயப் பேருரை, பட்டி மன்றம், இசை நிகழ்வு போன்ற கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ந)

## நேர்முகப்--

இது தொடர்பாக சிவில் நிர்வாக காரியாலயம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது. 11ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாந்தர அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு செல்லவிருக்கும் சகலரும் விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமைக்குப் பிந்தாமல் அனுப்பி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கல்விப்பணிப்பாளர் சேகரிக்கும் விண்ணப்பங்களை சிவில் நிர்வாக அலுவலகத்தில் உடன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது, 100 பேர் சேருமிடத்து விசேட விமானப் போக்குவரத்து 9ஆம் திகதி வியாழக்கிழமை நடாத்தப்படும்,

மேலதிகமாக விண்ணப்பங்கள் கிடைக்கும் இடத்தில் 10ஆம் திகதியும் போக்குவரத்து நடைபெற ஒழுங்கு செய்யப்படுமென சிவில் நிர்வாகம் அறிவித்துள்ளது, [வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு

# பயணிகள் போக்குவரத்து செய்ய மன்னார்உயிலங்குளம்பாதைதிறப்பு

### பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தீர்மானம்

[கொழும்பு]

வடக்குக் கிழக்கு மாகாணப் பாதுகாப்பு சபைக்கூட்டம் நேற்றுஆளுநர் அசோகா ஜெயவர்த்தனா தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

கிளிநொச்சி முல்லைத்தீவு அரச அதிபர்களைத் தவிர ஏனையோர் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

மன்னார் சிலாவத்துறை கடற் பகுதியிலும் மன்னார் கடலில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவு வழங்க வேண்டுமென்றும்,

வடக்குக் கிழக்கில்மக்களை மீளக் குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை அந்தந்தப் பகுதி அரச அதிபர்கள் எடுப்பதுடன் அறிக்கை தயாரித்தனுப்ப வேண்டுமெனவும்,

இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்கவும் அவர்களைக் கைது செய்து பொலிசில் ஒப்படைப்பதெனவும்,

போக்கு வரத்திற்கு மன்னார் உயிலங்குளம் பாதையைத் திறந்து விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (வ)

## தபால் பொதிகள் எடுத்து வரப்படும்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து இன்று காங்கேசன் துறை வரும் லங்கா முடித்த கப்பலில் 1024 தபால் பொதிகள் எடுத்துவரப்படுகின்றதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தபால் பொதிகள் அனைத்தும் உடன் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுமெனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தீர்த்தமாட அனுமதி

மகா சிவராத்திரி அமாவாசைத் தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காரைநகர் ''கஜ-ர்னாபீச்'' தீர்த்தக் கரையில் பக்தர்கள் தீர்த்தமாட கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் ஆதீன கர்த்தாக்கள் கடற்படைப் பொதுசின தொடர்பு அதிகாரியை கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4)

## திருமலை---

கொலைக்குண்டுதாரி இனங்காணப்பட்டுள்ளார்.

திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கடந்த எட்டு வருடங்களாக இவர் சிற்றூழியராகக் கடமையாற்றியவர் எனவும், நேற்று முதல் உவர் மலையிலுள்ள மாகாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் எனவும் திருகோணமலைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இப் பெண் மனையாவெளியிலுள்ள திருமலை தளவைத்தியசாலையில் கடமையாற்றும் மேற்பார்வையாளர் ஒருவரின் அாச விடுதியிலேயே தங்கியிருந்ததாக விசாரணையின் மூலம் தெரியவந்ததையடுத்து மேற்பார்வையாளரையும் அவரது குடும்பத்தினரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

அத்துடன் தற்கொலை குண்டுதாரி கடமையாற்றிய கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின்அதிபரும், பொலிஸாரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதோடு திருமலை நகரை விட்டு அவர் வெளியேறுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ந]

# மக்கள் ஜனநாயகப் பேரவை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு

திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்தும், ஆலய சுற்றாடலிலிருந்தும் இராணுவத்தை வெளியேற்றக் கோரி நாளை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும் இ.நடராசாவிற்கு (தில்லைக்கூத்தன்) ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை மக்கள் ஜனநாயகப் பேரவை வெளியிட்டுள்ளது.

ஜனநாயகப் பேரவையின் சார்பில் முன்னாள் எம்.பி. இராமேஸ்வரன் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தில்லைக்கூத்தனால் மேற்கொள்ளப்படவிருக்கும் புனிதப் போராட்டத்திற்கு அனைத்து மத அமைப்புகளும், கட்சிகளும் ஆதரவு செலுத்தி திருக்கேதீஸ்வரத்தின் புனிதத் தன்மையைப் பேண வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (வ)

# 100 பக்தர்கள் கொழும்பில் இருந்து இன்று திருக்கேதீஸ்வரம் செல்வர்!

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கு கொழும்பிலிருந்து நூறு பேர் இ. தொ. காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் தலைமையில் செல்லவுள்ளனர்.

இவர்களில் ஒரு தொகுதியினர் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திலிருந்து ஒருபஸ்ஸிலும்கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வர ஆலயத்திலிருந்து ஒருபஸ்ஸிலும் காலை 5மணியளவில் புறப்படவுள்ளனர்.

இவர்கள்இன்று இரவு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் தங்கியிருந்து பூசைகளில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படவில்லை யாதலால் இன்று மாலையே கொழும்பு திரும்பவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [4]

## தாச்சிப் போட்டி

அரியாலை காந்தி சன சமூக நிலையத்தின் பொன் விழாவினை ஒட்டி அரியாலை காந்தி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் தாச்ச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை முதல் 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது, (4]

## உதவிக் குரு அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியதிருச் சபையாழ் அத்தியாட்சாதீனத்தின் அச்சுவேலி திருச்சபையில் ஊழியனாக இருக்கும் சகோதரன் ப.தேவராஜாவின் உதவிக் குரு அபிஷேக ஆராதனை இன்று காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தின் அத்தியட்சர் பேராயர் அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்களால் நிறைவேற்றி வைக்கப்படும். (ந)

## திருக்கேதீஸ்வர---

வம் வெளியேறியுள்ளதெனினும் ஆலயத்தின் வளவிலிருந்து இன்னமும் இராணுவம் முற்றாக வெளியேறவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிவராத்திரி தினத்தன்று காலை பூசை ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயப் புனரமைப்பிற்கு அரசு ஒதுக்கியிருக்கும் நிதியினை பயன்படுத்துவதற்கு அரசு காலதாமதமின்றி அனுமதி வழங்க வேண்டும் என்று பொது அமைப்புக்கள் கேட்டுள்ளன.

ஆலய வளவினுள்ளும் அதனையண்டியுள்ள பிரதேசங்களிலும் இராணுவம் படிப்படியாக ஒருவாரகாலத்துக்குள் வெளியேற்றப்பட்டுவிடும் எனவும் அரசு தெரிவித்துள்ளது, (வ)

## உடையமைத்தல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யா/இளவலை கன்னியர் மட மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப்பிரிவினரால் இன்று பிற்பகல் 1'30 (புதியநேரம்) மணிக்கு உடையமைத்தல் பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது, (வ)

## படைமுற்றாக. . .

குமரகுருபரன்ஐ.தொ.காங்கிரஸ் செயலாளர் மனோகணேசன் ஆகியோருடன் அகில இலங்கை இந்துமாமன்றம்இந்துப் பேரவை, விவேகானந்தா சபை, மற்றும் திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபை பிரதிநிதிகளும் இந்துமாமன்ற உப தலைவர் எஸ். கணநாதலிங்கம் இந்து பேரவையை சேர்ந்த பொன். பரமபாலன் விவேகானந்த சபைச் செயலாளர் அ. இராசபுவனேஸ்வரன் தமிழர் விடுதலைக்கூட்டணிமாநகரசபைஉறுப்பினர் முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உலக சைவப் பேரவைக்கும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கும், பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுரத்தரத்வத்த கலாச்சார அமைச்சு ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [வ]

**லஷ்சுமி**

இணுவில்.

**இளைய தளபதி விஜய் "பூவே உனக்காக"**

10-30, 2-30 (ப-நே)

சிவராத்திரியை முன்னிட்டு

(5-00)

**ரஜனியின் "பாட்ஷா"**

(கி-108)